**31.07.2026**

CC.No. 105/2023 சுரேஷ் த/பெ. மணிமாறன் PW1

சாட்சி மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது.

**குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்)**

15.01.2023 அன்று நடந்த பிரச்சனை தொடர்பாக நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. நான் எந்த தேதியில் நடந்த பிரச்சனைக்காக புகார் கொடுத்தேன் என்றால் 17.01.2023 அன்று நடந்த பிரச்சனைக்காக புகார் கொடுத்தேன். 17.01.2023 பிரச்சனைக்கு பிறகு நான் எங்கு சென்றேன் என்றால் 108 ஆம்புலன்ஸ் மூலமாக மண்ணச்சநல்லூர் மருத்துவமனைக்கு சென்றேன். மருத்துவமனையில் நான் இருக்கும் போது புகார் வாக்குமூலத்தை நான் எழுதினேனா அல்லது போலீசார் எழுதினார்களா என்றால் போலீசார் எழுதினார்கள். போலீசார் எழுதிய புகார் வாக்குமூலத்தை நான் படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். அந்த புகார் வாக்குமூலத்தில் நான் 108 ஆம்புலன்ஸ் மூலமாக மருத்துவமனைக்கு வந்தது குறித்து குறிப்பிடப்பட்டிருந்ததா என்றால் குறிப்பிடப்பட்டிருந்தது. போலீசார் என்னிடம் எப்போது புகார் வாக்குமூலம் பெற்றார்கள் என்றால் 19.01.2023 காலை என்னிடம் புகார் வாக்குமூலம் பெற்றார்கள். புகார் வாக்குமூலத்தில் காளியம்மன் கோவில் முன்பு பிரச்சனை நடந்ததாக தான் சொல்யுள்ளேன் என்றால் சரிதான். புகார் வாக்குமூலத்தில் சம்பவ இடத்தில் இருந்த நபர்களின் பெயர்களை குறித்து நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் எத்தனை நாட்கள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன் என்றால் 2 நாட்கள் சிகிச்சை பெற்றேன். நான் மருத்துவமனையில் என்னை பரிசோதித்து என்னுடைய

உடல் நிலை நன்றான பிறகு தான் என்னை மருத்துவமனையில் இருந்து விடுவிப்பு செய்தார்கள் என்றால் சரிதான். என்னுடைய புகார் வாக்குமூலத்தில் எந்த எதிரி என்னை வெட்ட வந்தார் என குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல சொல்லியுள்ளேன். நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் நான் மது போதையில் இரு சக்கர வாகனத்தில் சென்று கீழே விழுந்ததால் ஏற்பட்ட காயங்களுக்காக மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுக்கொண்டேன் என்றால் சரியல்ல. நான் மது போதையில் இருந்ததால் தான் 18.01.2023 அன்று மருத்துவமனைக்கு சென்று விட்டு அன்றையே தினமே சிகிச்சை எடுத்துக்கொள்ளாமல் மருத்துவமனையில் இருந்து சென்றுவிட்டேன் என்றால் சரியல்ல. எதிரிகள் என்னை ஆபாசமான வார்த்தைகளால் திட்டவில்லை என்றாலும் எதிரிகள் எனக்கு எந்த காயத்தையும் ஏற்படுத்தவில்லை என்றாலும் சரியல்ல. நான் புகாரில் சொல்லியுள்ளது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், எதிரிகளை பழி வாங்க வேண்டும் என்பதற்காக அவர்கள் மீது பொய்யான புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. 15.01.2023 அன்று நான் சொல்வது போல் எதிரிகள் எந்த பிரச்சனையும் செய்யவில்லை என்றாலும் நான்தான் மது போதையில் பிரச்சனை செய்தேன் என்றாலும் ஊர் பெரியவர்கள் என்னை வீட்டிற்கு அனுப்பி வைத்தார்கள் என்றால் சரியல்ல.

ஒப்பம்/-சு.அருணாச்சலம்,
நீதித்துறை நடுவர்,
இலால்குடி

/உண்மை நகல்/ ARUNACHALAM Digitally signed by ARUNACHALAM Date: 2026.07.31 13:28:56 +0530

நீதித்துறை நடுவர்,
இலால்குடி

**31.07.2026**

CC.No. 105/2023 சரவணன் த/பெ.கலியபெருமாள் PW3

சாட்சி மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது.

**குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்)**

நான் எந்த பிரச்சனைக்காக கையொப்பம் செய்து கொடுத்தேன் என்ற விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். வழக்கு சம்பவம் குறித்து நேரடியாக தெரியாது என்றால் சரிதான். போலீசார் வரைபடம் வரைவதற்கு நான் விபரங்கள் சொன்னேனா என்றால் இல்லை. நான் கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதியிருந்தது என படித்து பார்த்தேனா என்றால் இல்லை. போலீசார் எதற்காக என்னிடம் கையொப்பம் பெற்றார்கள் என்ற விபரத்தை என்னிடம் சொல்ல வில்லை என்றால் சரிதான். நான் போலீசார் கேட்டுக்கொண்டதற்காக கையொப்பம் செய்து கொடுத்தேன் என்றால் சரிதான். என்னுடம் வேறு யாரேனும் கையொப்பம் செய்தார்களா என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

ஒப்பம்/—சு.அருணாச்சலம்,
நீதித்துறை நடுவர்,
இலால்குடி

/உண்மை நகல்/

ARUNACHALAM
Digitally signed by ARUNACHALAM
Date: 2026.07.31 13:29:04 +0530

நீதித்துறை நடுவர்,
இலால்குடி

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, LALGUDI.**

**Case No. CC.No. 105 of 2023**

**Prosecution Witness : PW5**

| | | | |
|---|---|---|---|
| **Name** | **: திரு. மதன்** | **Taluk** | **:** |
| **Father's Name** | **:** | **Calling** | **:** |
| **Village** | **:** | **Age** | **:** |

**(Accused Present)**

**Dated.31.07.2026**

**முதல் விசாரணை**

நான் சிறுகனூரில் வசித்து வந்து பி.இ படித்து வருகிறேன். அ.சா.1 யை எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். சுமார் 3 வருடங்களுக்கு முன்பு தேதி, மாதம், நேரம் தற்போது நியாபகமில்லை, மாட்டு பொங்கல் அன்று இரவு நேரம் நான் வீட்டில் இருந்தேன். எங்கள் ஊரில் உள்ள காளியம்மன் கோவில் முன்பு ஒரே சத்தமாக இருந்தது. நான் சம்பவம் இடம் சென்று பார்த்த போது அ.சா.1 க்கும் எதிரிகளுக்கும் இடையே சண்டை என்று அங்கிருந்தவர்கள் சொன்னார்கள். பின்னர் 108 ஆம்புலன்ஸ் மூலமாக சிகிச்சைக்காக அ.சா.1 யை மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். வழக்கு பற்றி வேறு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை .

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்கப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

**கு.வி (அரசு தரப்பில்)**

கடந்த 15.01.2023 ம் தேதி இரவு 10 மணியவில் ஆஜர் எதிரிகள் இருவரும் சிறுகனூர் சமூத கூடம் அருகில் நின்று கொண்டிருந்த அ.சா. 1 னிடம் தகராறு செய்து அசிங்கமான வார்த்தைகளால் பேசி இவ்வளவு நாள் எப்ப ஊருக்கு வருவே என்று எதிர்பார்த்துக்கொண்டிருந்தேன் என்று கூறி கைகளாலும், கற்களாலும், சுரேஷை அடித்தார்கள் என்றால் சரியல்ல. பின்னர் கிராமத்தில் உள்ளவர்களிடம் அ.சா.1 ன்னு சொல்லியதால் கிராமத்தில் உள்ளவர்கள் முன்னிலையில் எந்த பிரச்சனையும் செய்யமாட்டேன் என்று சொல்லிவிட்டு எதிரிகள் சென்று விட்டார் என்றால் சரியல்ல. கடந்த 17.01.2023 ம் தேதி இரவு 11.30 மணியவில் பொங்கல் விளையாட்டு போட்டி முடிந்து எங்கள் தெருவில் உள்ள காளியம்மன் கோவில் முன்பு நானும் எனது நண்பர்களான சுரேஷ், வெற்றி மற்றும் சிலர் நின்று பேசிக்கொண்டிருந்தோம் என்றால் சரியல்ல. அப்போது அங்கு வந்த எதிரிகள் அ.சா.1 யை அசிங்கமான வார்த்தைகளால் பேசி என்னைய ஊரில் வைத்து அவமானம் படுத்துரியா என்று கூறி சுரேசை கத்தியால் வெட்ட வந்தார்கள் என்றால் சரியல்ல. அதனை அ.சா.1 கையால் தடுத்த போது அவருக்கு இடது கட்டை விரலில் இரத்த காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. தலையில் வலது புறம் காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. அ.சா.1 சத்தம் போடவே அருகில் இருந்தவர்கள் வருவதை பார்த்த எதிரிகள் இருவரும் அ.சா.1 யை பார்த்து என்னைக்கு இருந்தாலும் உன்னை கொல்லாமல் விடமாட்டோம் என்று மிரட்டி விட்டு கத்தியுடன் ஓடி விட்டார்கள் என்றால் சரியல்ல. நானும், சுரேஷ் அப்பாவும் அ.சா1 யை மண்ணச்சநல்லூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக கொண்டு சேர்த்தோம் என்றால் சரியல்ல. அ.சா.1 மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த போது மேற்படி சம்பம் குறித்து நடவடிக்கை எடுக்க

கூறி போலீசாரிடம் புகார் வாக்குமூலம் கொடுத்தார் என்றும் போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு எதிரிகள் எனது ஊரை சேர்ந்தவர்கள் என்பதால் அவர்களை வழக்கில் இருந்து காப்பாற்ற வேண்டும் என்பதற்காக நேரில் பார்த்த விபரங்களை மறைத்து உண்மைக்கு புறம்பான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**குறுக்கு விசாரணை(எதிரி தரப்பில்)–இல்லை**</u>

ஒப்பம்/–சு.அருணாச்சலம்,
நீதித்துறை நடுவர்,
இலால்குடி

/உண்மை நகல்/ ARUNACHALAM Digitally signed by ARUNACHALAM Date: 2026.07.31 13:29:13 +0530

நீதித்துறை நடுவர்,
இலால்குடி